செ.வெ.எண்: 565 நாள்: 03.10.2021

**புதுக்கோட்டை மாவட்டத்தில்**
**கோவிட்-19 மாபெரும் தடுப்பூசி முகாம்களை மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்ட அமைச்சர் திரு.எஸ்.ரகுபதி அவர்கள், மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன் அவர்கள், மாண்புமிகு சுற்றுச்சூழல், காலநிலை மாற்றத்துறை மற்றும் இளைஞர்நலன், விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு.சிவ.வீ.மெய்யநாதன் அவர்கள் ஆகியோர் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.**

---

புதுக்கோட்டை மாவட்டம், அரிமளம் ஊராட்சி ஒன்றியம், தேக்காட்டூர் ஊராட்சி, நமணசமுத்திரம் சமுதாயக் கூடத்திலும், புதுக்கோட்டை நகராட்சி நகர்மன்றக் கட்டிடத்திலும் இன்று (03.10.2021) நடைபெற்ற கோவிட்-19 மாபெரும் தடுப்பூசி முகாம்களின் பணிகளை மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்ட அமைச்சர் திரு.எஸ்.ரகுபதி அவர்கள், மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன் அவர்கள், மாண்புமிகு சுற்றுச்சூழல், காலநிலை மாற்றத்துறை மற்றும் இளைஞர்நலன், விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு.சிவ.வீ.மெய்யநாதன் அவர்கள் ஆகியோர் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.

மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.கவிதா ராமு, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இம்முகாம்கள் நடைபெற்றது. மாநிலங்களவை உறுப்பினர் திரு.எம்.எம்.அப்துல்லா அவர்கள் மற்றும் அலுவலர்கள் இந்த ஆய்வுப் பணிகளில் கலந்து கொண்டார்கள்.

ஆய்வுகள் மேற்கொண்ட பின்னர் மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது;

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி 4வது கோவிட்-19 மெகா தடுப்பூசி முகாம் தமிழ்நாடு முழுவதும் மிகச்சிறப்பாக இன்றையதினம் நடைபெற்று வருகிறது. இதுவரை 20,000 முகாம்களில் 13,44,000 நபர்களுக்கு தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது. இன்னும் 2 மணிநேரம் தடுப்பூசி செலுத்தும் பணி நடைபெற உள்ளது. இதன் முடிவில் 20 லட்சம் நபர்களுக்கு

தடுப்பூசி செலுத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. கனமழை காரணமாக ஒருசில மாவட்டங்களில் சிறிது குறைவான அளவில் தடுப்பூசி போடும் பணி நடைபெற்று வருகிறது. இது தவிர ஏனைய மாவட்டங்களில் கோவிட் தடுப்பூசி செலுத்தும் பணி சிறப்பாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

புதுக்கோட்டை மாவட்டத்தில் கோவிட் தடுப்பூசி செலுத்தும் பணிகளை பொறுத்தவரை தமிழகத்தில் சென்னைக்கு அடுத்தபடியாக தடுப்பூசி செலுத்தும் சதவீதத்தை அதிக அளவு எட்டிய மாவட்டம் புதுக்கோட்டை மாவட்டம் ஆகும். தமிழகம் முழுவதும் 62 சதவீதம் கோவிட்-19 முதல் தவணை தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது. 2ஆம் தவணை தடுப்பூசி 20 சதவீதம் செலுத்தப்பட்டுள்ளது. ஆனால் புதுக்கோட்டை மாவட்டத்தை பொறுத்தவரை முதல் தவணை தடுப்பூசி 63 சதவீதம் செலுத்தியுள்ளது.

இதே போன்று புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள மாற்றுத்திறனாளிகள், கர்ப்பிணித் தாய்மார்கள், பாலூட்டும் தாய்மார்களுக்கு போன்ற மூன்று பிரிவுகளிலும் 100 சதவீதம் கோவிட் தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது. இது தமிழகத்திலேயே புதுக்கோட்டை மாவட்டத்திற்கு கிடைத்துள்ள கூடுதல் சிறப்பாகும். அரியலூர் மாவட்டம் கர்ப்பிணித் தாய்மார்களுக்கு 100 சதவீதம் தடுப்பூசி செலுத்திய மாவட்டமாக உள்ளது. இதே போன்று முதல் தவணை தடுப்பூசி போடப்பட்ட மாவட்டமாக நீலகிரி மாவட்டம் உள்ளது.

தமிழகத்தில் 600க்கும் மேற்பட்ட கிராமங்களில் 100 சதவீதம் கோவிட் தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது. இதில் புதுக்கோட்டை மாவட்டத்தில் மட்டும் 122 கிராமங்களில் 100 சதவீதம் கோவிட் தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது. தடுப்பூசி செலுத்தும் பணிகளில் புதுக்கோட்டை மாவட்டம் தன்னிறைவு பெற்று வரும் மாவட்டமாக திகழ்கிறது.

புதுக்கோட்டை மாவட்டத்தில் முதல் மெகா தடுப்பூசி முகாம் 753 இடங்களில் நடத்தப்பட்டு 66,766 நபர்களுக்கு தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது. 2வது மெகா தடுப்பூசி முகாம் 180 இடங்களில் நடத்தப்பட்டு 20,742 நபர்களுக்கு தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது. 3வது மெகா தடுப்பூசி முகாம் 583 இடங்களில் நடத்தப்பட்டு 47,026 நபர்களுக்கு தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது. 4வது மெகா தடுப்பூசி முகாம் 609 இடங்களில் நடத்தப்பட்டு இன்றையதினம் பொதுமக்களுக்கு

தொடர்ந்து தடுப்பூசி செலுத்தப்பட்டு வருகிறது. 4வது தடுப்பூசி முகாம் இலக்கு 55,010 ஆகும். மழையால் சிறிது தொய்வு ஏற்பட்டாலும் இரவு 8 மணிக்குள் இந்த இலக்கை அடைவார்கள் என்ற நம்பிக்கை உள்ளது.

தமிழகத்தில் கோவிட் மூன்றாம் அலை ஏற்படக் கூடாது என்பதே அனைவரின் எண்ணமாகும். எனினும் மூன்றாம் அலை ஏற்பட்டாலும் அதனை எதிர்கொள்ளும் வகையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலுக்கிணங்க ஆக்ஸிஜன் வசதி, படுக்கை வசதி, மருந்து, மாத்திரைகள் உள்ளிட்ட அனைத்து வசதிகளும் தயார்நிலையில் உள்ளது.

மேலும், கோவிட் தடுப்பூசியை பொறுத்த வரை 70 சதவீதம் பேர் தடுப்பூசி செலுத்தி கொண்டால் பாதுகாப்பாக இருக்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. அந்த வகையில் தமிழகத்தில் நேற்றைய தினம் வரை 62 சதவீதம் நபர்களுக்கு கோவிட் தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது. இம்மாத இறுதிக்குள் தமிழகத்தில் 1.50 கோடி தடுப்பூசி செலுத்தும் வகையில் சுகாதாரத்துறையின் மூலம் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இவ்வாறு மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன் அவர்கள் தெரிவித்தார்.

இந்த ஆய்வின் போது பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத்துறை இயக்குநர் மரு.டி.எஸ்.செல்வவிநாயகம் அவர்கள், முன்னாள் அரசு வழக்கறிஞர் திரு.கே.கே.செல்லப்பாண்டியன் அவர்கள், அரிமளம் ஒன்றியக் குழுத் தலைவர் திருமதி.மேகலாமுத்து, இணை இயக்குநர் ஊரக நலப்பணிகள் மரு.ராமு, பொது சுகாதார துணை இயக்குநர்கள் மரு.அர்ஜீன்குமார், மரு.கலைவாணி, வருவாய் கோட்டாட்சியர் அபிநயா, நகராட்சி ஆணையர் நாகராஜன், வட்டாட்சியர் செந்தில்குமார் மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

---

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை.**